# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.123/2020 நாள்.12.08.2025

PW1- திரு.முருகானந்தம் , த /பெ. திரு. செல்லையன்

1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் தொழில் என்ன என்றால் விவசாயம் மற்றும் இடம் வாங்கி விற்பது, நெல் வாங்கி விற்பது. வருடத்திற்கு என்ன வருமானம் என்றால் சுமார் 15லட்சம் வரும், சில சமயம் கூடவும் வரும் குறையவும் வரும். வருமானவரி கட்டுகிறேனா என்றால் இல்லை. இடம் வாங்கிவிற்பது என் பெயரில் வாங்குவேனா என்றால் என் பெயரில் கிரயம் செய்துமாற்றுவேன். ரியல் எஸ்டெட் கம்பெனி வைத்துள்ளேனா என்றால் சாதாரணமாக வாங்கி விற்பதுதான். இடத்தை வாங்கி மனைகளாக போட்டு விற்பேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணம்தான் நானும் 1ஆம் பிரதிவாதியும் போட்டுகொண்ட ஒப்பந்தம் என்றால் ஆமாம். அதை எங்கு வைத்து தயார் செய்யபட்டது என்றால் முகிலன் என்ற வழக்கறிஞர் திருவையாறில் வைத்து தயார் செய்துகொடுத்தார். 1ஆம் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் வந்துபோய் பழக்கம். யார் மூலமாக பழக்கம் என்றால் நேரடியாக பழக்கம். திருவையாறு சாமிநாதன் வழக்கறிஞர் தெரியுமா என்றால் தெரியும் அவர் 1ஆம் பிரதிவாதியின் வழக்கறிஞர். என்னுடைய வழக்குகள் சாமிநாதன் வழக்கறிஞரிடம் இல்லையா என்றால் இல்லை. 1ஆம் பிரதிவாதிவழக்கறிஞர் என்றால் தெரியாது, சாமிநாதன் வழக்கறிஞரின் ஒட்டுனராக இருந்தார். அவரிடம் பேசியபோது வெளிநாடு போகவில்லையா என்று கேட்டேன் குடும்ப பிரச்சனை இருப்பதாக சொன்னார். அதற்குள் நான்போய் கேட்கவில்லை.2ஆம் பிரதிவாதி யார் என்றால் 1ஆம் பிரதிவாதியின் அண்ணன் மனைவி. கிரய ஒப்பந்தத்திற்காக எவ்வளவு பணம்கொடுத்தேன் என்றால் 36 லட்சம் விலை பேசி முன்பணம் 10 லட்சம் கொடுத்தேன். எந்த தேதியில் முன்பணம் கொடுத்தேன் என்றால் 16.11.2017. வா.சா.ஆ.2 கிரய ஒப்பந்தத்தில் 10 லட்சம் முன்பணம் கொடுத்தாக உள்ளதா என்றால் தலைப்பில் உள்ளது. பாக்கி தொகை எப்போது கொடுத்தேன் என்றால் 17.11.2017 அன்றைக்கு 6லட்சமும், 18.11.2017 அன்று 5 லட்சமும், மொத்தம் 21 லட்சம் கொடுத்துள்ளேன். ரூ 10 லட்சம் என்ன வகையில் கொடுத்தேன் என்றால் பணமாக கொடுத்தேன். ரொக்கம்

வீட்டில் வைத்திருந்தேனா, வங்கியில் வைத்திருந்தேனா என்றால் வீட்டில் வைத்திருந்தேன். எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் திருப்பந்துருத்தி இந்தியன் வங்கியிலும், நடுகாவேரி யூனியன் வங்கியிலும் உள்ளது. திருப்பந்துருத்தி எனக்கு சொந்த ஊரா என்றால் இல்லை நடுகாவேரி. திருப்பந்துருத்தி செழியனை தெரியும் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் கையெழுத்துக்கு மேலே அரை இன்ச் காலிஇடம் உள்ளது என்றால் ஆமாம். அதேபோல்தான் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ளது என்றால் ஆமாம். மேற்கண்ட ஆவணத்தில் சாட்சி கையெழுத்து யார் போட்டுள்ளார்கள் என்றால் 1ஆம் பிரதிவாதியின் அப்பா அம்மா தம்பி அவர்கள் கையெழுத்து தரப்பினர்கள் கையெழுத்திற்கு கீழே உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 வரைவு தயார் செய்தது வழக்கறிஞர் முகிலன் என்றால் ஆமாம். அது எந்த கணினி அலுவலகத்தில் தட்டச்சு செய்யபட்டது என்று வாசகம் இல்லை என்றால் வழக்கறிஞர் முகிலனைதான் கேட்கவேண்டும். முத்திரைதாள்வழக்கறிஞர் முகிலன் வாங்கினாரா என்றால் இல்லை நான்தான் வாங்கி கொடுத்தேன். ஒப்பந்தத்திற்கு 100 ரூபாய் தாளில் அடிக்கவேண்டும் என்றால் இல்லை 50 ரூபாய்க்கு நான்தான் வாங்கி கொடுத்தேன். ரூ 10லட்சம், 6லட்சம் கொடுத்ததற்கு நோட்டு உள்ளதா என்றால் உள்ளது. 1ஆம் பிரதிவாதி அப்துல் ஹமீதும், அவருடைய அப்பா, அம்மா தம்பியும் வெற்றுதாளில் கையெழுத்து போட்டு கொடுத்தார்கள் என்றும் நான் நிரப்பி கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் தயார் செய்ததால் இடைவெளி உள்ளது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் முகிலனை சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம். தாவா சொத்து என்ன சொத்து என்றால் புல எண் 10/11 வீட்டுமனை. அதில் வீடு உள்ளதா என்றால் இல்லை காலிமனை. காலிமனையின் அனுபவம் யாரிடம் உள்ளது என்றால் ஒப்பந்தம் போட்டதிலிருந்து என்னிடம் உள்ளது. வா.சா.ஆ.2 பதிவாகவில்லை என்றால் ஆமாம். இடத்தின் அனுபவம் என்னிடம் இல்லை என்றும் பிரதிவாதிகளிடம்தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. கந்தர்வக்கோட்டை மைதீனை தெரியுமா என்றால் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. 2019 இல் கள்ளக்குடி காவல்நிலையத்தில் எனக்கு எதிராக கு.எண் 38/2019 பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம் அந்த வழக்கில் விடுதலையாகிவிட்டேன். 1ஆம்

பிரதிவாதி விண்புரோமோட்டர்ஸ் மைதீனிடம் 5 லட்சம் கொடுத்தார் என்றும் அந்த பணத்தை நான் பெற்று தருகிறேன் என்று சொல்லி உறுதி கொடுத்ததால் 1ஆம் பிரதிவாதியும் அவர் குடும்பத்தாரும் என்னிடம் கிரய ஒப்பந்தம், கடனுறுதி பத்திரம் வெற்றுதாள்கள் ஆகியவற்றில் கையெழுத்து போட்டு கொடுத்தார்கள் என்றால் இல்லை. கந்தர்வகோட்டைக்கு 1ஆம் பிரதிவாதியுடன் போய் மேற்படி மைதீனை பலமுறை பார்த்தேன் என்றால் இல்லை. நானும், ஹக்கீம் பலமுறை அவ்வாறு போய் பார்த்தேன் என்றும் வழக்கிற்காக போகவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பணத்தை வசூல் செய்யதான் என்னிடம் வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வந்தபோதுதான் நான் பணத்தை வசூல் செய்து தருவதாக சொல்லி மேற்படி ஆவணத்தை தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ2 ஒப்பந்தம் கண்ட தொகைகளை கொடுக்க வருமானமும் வசதியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ரூ1000 கொடுக்க கூட வசதி இல்லை என்றால் சரியல்ல. கள்ளகுடி காவல்நிலையத்தில் தாக்கல் செய்யபட்ட வழக்கில் உள்ள செழியன் எனக்கு தெரியும். திருப்பந்துருத்தி செழியனும் மேற்படி செழியனும் ஒரே ஆள் என்றால் சரியல்ல. அந்த செழியனும் நானும் ஒரே கூட்டாளிகள் என்றும் பஞ்சாயத்து செய்யும் ஆட்கள் என்றும் சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்து பண்ண வகையில்தான் கந்தர்வகோட்டை மைதீனிடம் வசூல் செய்வதற்காகதான் 1ஆம் பிரதிவாதி வந்தார் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி எனக்கு கொடுத்திருந்த பொது அதிகாரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. ரூ 21 லட்சம் வரிசையாக மூன்று நாட்கள் கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம். ஒரே நாளில் கொடுத்திருக்கலாமே ஏன் மூன்று நாட்கள் கொடுத்தேன் என்றால் சூழ்நிலை சொல்லி கேட்கும்போது தவிர்க்கமுடியவில்லை. என்ன பிரச்சனை என்றால் குடும்ப பிரச்சனை கல்யாணம் குறித்திருப்பதாக சொன்னார், கேஸ் இருப்பதாக சொன்னார். மேற்படி தொகையை எந்த வகையில் கொடுத்தேன் என்றால் எல்லாம் ரொக்கமாகதான் கொடுத்தேன். அடுத்தடுத்து இரண்டு நாட்களில் 6லட்சமும், 5லட்சமும் கொடுத்தற்கு வா.சா.ஆ.2இல் குறிப்பு இல்லை என்றால் ஆமாம். பணத்தை பெற்று கொண்டு அவர் சொத்தை ஒப்படைத்து விட்டதால் சுவாதீனம் வந்துவிட்டதால் பவர் கொடுப்பதாக சொன்னதால் எதுவும் பேசமுடியவில்லை.

<u>2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வா.சா.ஆ.2 கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு சொத்து சம்மந்தமாக மூல ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். மூல பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மூல பத்திரத்தில் தாவா சொத்து யார் பெயரில் இருந்தது என்றால் 1ஆம் பிரதிவாதியின் அப்பா ஐயூப்கான் பெயரில் இருந்தது அவர் 1ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். எந்த தேதியில் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. கிரய ஒப்பந்தம் போட்ட தேதியில் 1ஆம் பிரதிவாதியின் பெயரில் இருந்த செட்டில்மெண்ட் பத்திரம் அமலில் இருந்ததா என்றால் இருந்தது. 1 ஆம் பிரதிவாதிக்கு அவருடைய தகப்பனார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது என்றால் தெரியாது. 1ஆம் பிரதிவாதியின் பெயரில் சொத்து அவருடைய தகப்பனாரால் எழுதி கொடுத்த பிறகு 2ஆம் பிரதிவாதியை ஏன் வழக்கில் கட்சி சேர்த்தேன் என்றால் 1ஆம் பிரதிவாதிக்கும், 2ஆம் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்து மற்றும் பிற சொத்துக்களுக்கு வழக்கு நடப்பதால் சேர்த்துள்ளேன். 1ஆம் பிரதிவாதிக்கும், 2ஆம் பிரதிவாதிக்கும் நடக்கும் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் தெரியாது. வழக்கு நடப்பது தெரியும் என்று சொன்னேனே குறிப்பாக என்ன வழக்கு என்றால் இடத்திற்கான வழக்கு. 1, 2 பிரதிவாதிகள் வழக்கு எல்லாம் முடிந்துபோய் தாவா சொத்து 2ஆம் பிரதிவாதிக்குரியது என்று முடிவாகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது.

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**